

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.7.2023) சென்னை, சர்.பிட்டி தியாகராயார் கலை மன்றத்தில் நடைபெற்ற பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு புத்தகங்களை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், திராவிடர் கழகப் பிரச்சார செயலர் வழக்குரைஞர் அருள்மொழி, பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் துணைவியார் பார்வதி அம்மையார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.7.2023) சென்னை, சர்.பிட்டி தியாகராயர் கலை மன்றத்தில் நடைபெற்ற பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு ஆசிரியர் மற்றும் மாணவ – மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், திராவிடர் கழகப் பிரச்சார செயலர் வழக்குரைஞர் அருள்மொழி, பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் துணைவியார் பார்வதி அம்மையார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சில வரிச் செய்திகள்!

### 6 கோடி பேர் வருமான வரி தாக்கல் செய்துள்ளனர்!

**வருமான வரித்துறை அறிவிப்பு!**




புதுடெல்லி, ஆக. 1 -

மத்திய வருமான வரித் துறை நேற்று முன்தினம் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் கூறியுள்ளதாவது:

2022-23 மதிப்பீட்டு ஆண்டு வருமான வரி தாக்கலுக்கு கடைசி நாள் ஜுலை 31ந்தேதி ஆகும். நேற்று முன்தினம் மாலை 6.30 மணி வரை சுமார் 6 கோடி பேர் வருமான வரி தாக்கல் செய்திருந்தனர். கடந்த ஆண்டைவிட அதிகமானோர் தாக்கல் செய்துள்ளார்கள். நேற்று முன்தினம் மட்டும் சுமார் 26 லட்சத்துக்கும் அதிகமானோர் வருமான வரி தாக்கல் செய்துள்ளனர். வருமான வரி தாக்கல் செய்வோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இதற்காக வரி செலுத்துவோருக்கு நன்றி தெரிவிக்கிறோம் என பதிவிட்டுள்ளது.

### தக்காளி விற்பனை செய்து 45 நாட்களில் ரூ.4 கோடி சம்பாதித்த ஆந்திர விவசாயி!

சித்தூர், ஆக. 1 -

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி முரளி (வயது 48). கூட்டுக்குடும்பமாக வசிக்கும் இவருக்கு கர்காமண்டலா கிராமத்தில் 22 ஏக்கர் நிலம் உள்ளது. தக்காளி விவசாயத்தில் அதிக லாபம் அடைந்தது குறித்து விவசாயி முரளி கூறியதாவது:

கடந்த 8 ஆண்டுகளாக தக்காளி விவசாயத்தில் ஈடுபட்டுள்ளேன். கடந்தாண்டு ஜுலை மாதத்தில் தக்காளி விலை வீழ்ச்சியால் எனக்கு ரூ.1.5 கோடி கடன் ஏற்பட்டது. அடிக்கடி மின்தடையால் விளைச்சலும் சரியாக இல்லை.

ஆனால் இந்தாண்டு எனக்கு அதிர்ஷ்ட காற்று வீசியது. எனது நிலத்தில் விளைச்சலும் அமோகமாக இருந்தது. இதுவரை 35 முறை அறுவடை செய்துவிட்டேன். எனது வயலில் இன்னும் 15 முதல் 20 முறை தக்காளி அறுவடை செய்யலாம். தக்காளிக்கு கோலார் வேளாண் சந்தையில் நல்ல விலை கிடைப்பதால், 130 கி.மீ. தூரம் பயணம் செய்து தக்காளியை விற்பனை செய்கிறேன். கடந்த 45 நாளில் ரூ.4 கோடிக்கு தக்காளியை விற்பனை செய்தேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

**35 பேர் பலி! 150 பேர் படுகாயம்!**



கராச்சி, ஆக 1 -

பாகிஸ்தானில் நிகழ்ந்த பயங்கர குண்டு வெடிப்பு சம்பவத்தில் 35 பேர் உயிரிழந்தனர். பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள பஜார் மாவட்டத்தில் இஸ்லாமிய அரசியல் கட்சி கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஜே.யு.ஐ.எப். அமைப்பு சார்பில் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அங்கே எதிர்பாராதவிதமாக திடீரென குண்டுவெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த பயங்கர குண்டுவெடிப்பில் குறைந்தது 35 பேர் உயிரிழந்தனர் என்றும், 150 பேர் படுகாயமடைந்தனர் என்றும் அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் காயமடைந்தவர்கள், பெஷாவர் மற்றும் டைமர்கெராவில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தார்.

மனித வெடிகுண்டு மூலம் குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என அச்சம் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த சம்பவம் குறித்து அங்குள்ள அதிகாரிகள் விசாரணை நடத்திவருகின்றனர். இந்த குண்டுவெடிப்பு சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### இந்தியாவில் 3 ஆண்டுகளில் 13 லட்சம் பெண்கள் மாயம்!

புதுடெல்லி, ஆக. 1 -

18 வயதுக்கு மேற்பட்ட 10.61 லட்சம் பெண்கள் காணாமல் போயுள்ளனர் என ஒன்றிய அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய குற்ற ஆவணம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நம் நாட்டில் பல்வேறு காரணங்களுக்காக பெண்கள் காணாமல் போவது அதிகரித்து வருகிறது. கடந்த, 2019 21ம் ஆண்டுகளில் மட்டும் நாடு முழுதும் 18 வயதுக்கு மேற்பட்ட 10.61 லட்சம் பெண்கள் காணாமல் போயுள்ளனர். இதில் 2021ல் மட்டும் 3.75 லட்சம் பெண்கள் மாயமாகி உள்ளனர். இந்த காலகட்டத்தில் 18 வயதுக்கும் கீழ் உள்ள 2.51 லட்சம் சிறுமியர் காணாமல் போயுள்ளனர்.

இவற்றில் மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் அதிக எண்ணிக்கையில் பெண்கள் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 57 ஆயிரம் பெண்கள் மாயமாகி உள்ளனர். யூனியன் பிரதேசங்களில் தலைநகர் டெல்லியில் தான் அதிக அளவில் பெண்களும் சிறுமிகளும் காணாமல் போயுள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல்லை மாவட்டத்தில் - கூட்டுறவுத்துறை மூலம்**

# 643 பயனாளிகளுக்கு ரூ.5.28 கோடியில் கடன் உதவிகள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்!

நெல்லை, ஆக. 1 -

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் பாளையஞ்செட்டிகுளம் மற்றும் ரெட்டியார்பட்டி ஆகிய இடங்களில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம் நடைபெற்று வருவதை நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டார்.அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கூட்டுறவுத் துறையின் மூலம் 643 பயனாளிகளுக்கு ரூ5.28 கோடி மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கினார்.

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடைபெற்ற கடன் உதவிகள் வழங்கும் நிகழ்வில் 643 பயனாளிகளுக்கு ரூபாய் 5.28 கோடி மதிப்பிலான கடன் உதவிகளையும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் 32 பயனாளிகளுக்கு ரூபாய் 11.56 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் 10 மாற்றுத்திறனாளி களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களையும் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவி குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்களும் பெண்கள் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும் என்று உயரிய நோக்கில் நகைக்கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவி குழு கடன் உதவிகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மகளிர் கட்டணமில்லா பேருந்து திட்டத்தின் கீழ் மகளிர்கள் நகரப் பேருந்துகளில் எத்தனை முறை வேண்டுமானாலும் இலவசமாக பயணம் மேற்கொண்டு வருவதால் அவர்களின் பணம் சேமிப்பதற்கு இத்திட்டம் ஊன்றுகோலாக அமைகிறது.

நெல்லை மாவட்டத்தில் மொத்தம் குடும்ப அட்டைதாரர்கள் 5,01,877 உள்ளார்கள் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் இதுவரை முதல் கட்டமாக கிராமப்புறங்களில் 528 நியாய விலை கடைகளில் 2,46, 277 குடும்ப அட்டைதாரர்களில் 2,16,025 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டதில் 760 முகாம்கள் மூலம் 1,49,353 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக நகர்புறத்தில் 312 நியாய விலைக் கடைகளில் உள்ள 2,55,600 குடும்ப அட்டைதாரர்களுக்கு 182023 முதல் விண்ணப்பங்கள் மற்றும் டோக்கன்கள் வழங்கப்பட உள்ளது.

மகளிர் வாழ்வாதாரத்தில் முன்னேற வேண்டும் என அவர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் தொழில் தொடங்குவதற்கான கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.அதன்படி இன்று நெல்லை மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூபாய் 20 லட்சத்து மதிப்பில் 25 பயனாளிகளுக்கு உழவர் காசு கடன்களையும் ரூபாய் 13 லட்சம் மதிப்பில் 28 பயனாளிகளுக்கு மத்திய கால கறவை மாட்டுக் கடன்களையும், ரூபாய் 15.86 லட்சம் மதிப்பில் 19 பயனாளிகளுக்கு சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கான கடன்களையும் ரூ.11.20 லட்சம் மதிப்பில் 20 பயனாளிகளுக்கு ஆதிராவிடர் நலத் திட்டத்திற்கான கடன்உதவிகளையும் ரூபாய் 4.20 கோடி மதிப்பில் 35 குழுவினை சார்ந்த சுமார் 520 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன்களையும் ரூபாய் ஒரு லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு மகளிர் தொழில் முனைவோர் கடன் உதவிகளையும் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் 10 பயனாளிகளுக்கு சிறு வணிக கடன்களையும் ரூபாய் 25000 மதிப்பில் ஒரு பயனாளிக்கு மாற்றுத்திறனாளி கடன் உதவிகளையும், ரூபாய் 50,000 மதிப்பில் ஒரு பயனாளிக்கு கணவனால் கைவிடப்பட்ட கை பெண்கள் ஆதரவற்ற உதவிகள் கடன் உதவிகளையும் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு சம்பளக் கடன் உதவியும் ரூபாய் 1 லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு முத்துரா கடன் உதவி என மொத்தம் 643 பயனாளிகளுக்கு ரூ.5.28 கோடியில் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 32 பயனாளிகளுக்கு11.56 லட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மூன்று சக்கர சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,10 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் செந்தில்குமார், மாநகராட்சி ஆணையாளர் சிவ கிருஷ்ணமூர்த்தி,துணை மேயர் ராஜ் மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் ஜெகதீஸ்,பாளையங்கோட்டை ஒன்றியக் குழு தலைவர் தங்கபாண்டியன் கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் அழகிரி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் உமா மகேஸ்வரி உள்பட கூட்டுறவு சங்க அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**மதுரை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாக**

# தொகுதி வாரியாக பாக முகவர்கள் சிறப்பு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, ஆக. 1 -

மதுரை வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ராமநாதபுரத்தில் நடைபெற உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் பி.எல்.எ 2க்கான பயிற்சி பாசறை கூட்டத்தில் பங்கேற்பது தொடர்பாக வடக்கு மாவட்டத்தில் உள்ள மதுரை கிழக்கு, சோழவந்தான் மற்றும் மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான சிறப்பு வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் ஆகஸ்ட் மாதம் 6ம்தேதி ஞாயிற்றுக் கிழமை கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளதாக வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார். அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சிக்கு அனைத்து தரப்பு மக்களிடையே மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ள நிலையில் விரைவில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. அதற்கான ஆயத்த பணிகளை கழகத் தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின்படி இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் பேரில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தேர்தலில் முக்கிய பங்கு வகிக்கும் வாக்குச்சாவடி முகவர்கள் பி.எல்.எ2க்கான பயிற்சி பாசறை கூட்டம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ராமநாதபுரத்தில் நடைபெற உள்ளது.

இதில் வடக்கு மாவட்டத்தில் உள்ள மதுரை கிழக்கு, சோழவந்தான் மற்றும் மேலூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்களும் பங்கேற்க வேண்டியுள்ளது.

அதனை முன்னிட்டு வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை கிழக்கு, சோழவந்தான் மற்றும் மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிறப்பு வாக்குச்சாவடி முகவர்களுக்கான சிறப்புக் கூட்டம் வருகிற 06.08.2023 ஞாயிற்றுக்கிழமை தொகுதி வாரியாக கீழ்க்காணும் அட்டவணைப்படி நடைபெற உள்ளது, அதன்படி மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கு அன்றைய தினம் காலை 10 மணிக்கு திருப்பாலை யாதவா பெண்கள் கல்லூரி அருகில் உள்ள குறிஞ்சி மகாலில் நடைபெறுகிறது.

அதனை தொடர்ந்து சோழவந்தான் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி முகவர்களுக்கான சிறப்பு கூட்டம் அலங்காநல்லூரில் உள்ள சுபிக்க்ஷா திருமண மஹாலில் காலை 11.30 மணிக்கு நடைபெற உள்ளது.

அதன்பின் மாலை 3 மணிக்கு மேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்களுக்கான சிறப்பு கூட்டம் அங்குள்ள மூவேந்தர் பண்பாட்டு கழக திருமண மஹாலில் நடைபெற உள்ளது.

இதில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அந்தந்த வாக்குச்சாவடி முகவர்களை அழைத்து வந்து தவறாமல் கலந்து கொள்ள செய்து சிறப்பிக்க வேண்டும்.

மேலும் இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதி நிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தினர் உள்ளிட்டோர் சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.





இராணிப்பேட்டை மாவட்டம், ஜி.கே.உலகப்பள்ளி மற்றும் முத்துக்கடையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 7வது ஹீரோ ஆசிய ஆடவர் ஹாக்கி விளையாட்டுப் போட்டிகள் வெற்றிக்கோப்பை அறிமுக விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி கோப்பையை வரவேற்றார். இதில் மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண்சுருதி, கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் ஆர். வினோத்காந்தி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஜி.கே.குழுமம் சந்தோஷ்காந்தி, மற்றும் பள்ளி மாணவர்கள் ஏராளமான பொதுமக்கள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எம்.துரைசாமி

**ஆகஸ்ட் 1 (2020)**



தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு புழல் பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.

புழல் ஒன்றியச் செயலாளராகவும், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட பொருளாளராகவும், அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை நாரவாரிகுப்பம் பேரூராட்சி மன்றத் தலைவராகவும், மூன்று முறைமாதவரம் நகர்மன்ற உறுப்பினராகவும் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். நெல்,அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**